# சீர்காழி நகராட்சி



2018–ம் ஆண்டு ஜீலை மாதம் 17.07.2018 செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதா கூட்ட நடவடிக்கை.

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர் (ம) ஆணையர்
சீர்காழி நகராட்சி.

<table>
<tr><td>பொருள் எண்–1</td><td>சீர்காழி நகராட்சி உட்பட்ட 24 வார்டுகளுக்கு செலுத்தப்படவேண்டிய சொத்து வரி ,தொழில் வரி , குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களுக்கான நடப்பு நிலுவை விவரத்துடன் கூடிய கேட்பு அறிவிப்புகள் ஒவ்வொரு வரி விதிப்பு எண்களுக்கும் தனித் தனியே ( கணினி வாயிலாக ) அச்சடித்து வரி செலுத்துபவர்களுக்கு வழங்க அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூர் மற்றும் அருகில் உள்ள கணினி சார்ந்த அச்சகங்களிலிருந்து விலைப் புள்ளிகள் பெற்று அச்சடிக்கவும் அதற்காக உத்தேச செலவினங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2489/2018/அ.1</td></tr>
<tr><td>பொருள் எண்–2</td><td>சீர்காழி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் ஈசானிய தெருவில் உள்ள கலவை உரத்திடலில் காணப்படும் குப்பைகளை வாரி எடுத்து ஒரு சேர குவித்து தொடர்ந்து குப்பைகளை கொண்டுவதற்கு ஏதுவாக JCB இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் வாயிலாக பணிகள் மேற்க்கொள்ள 1.50 இலட்சத்திற்கு நகர் மன்ற தீர்மான எண்178 நாள்.19.03.2018 ன் படி கலவை உரங்கிடங்கில் பணி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. பட்டியல் தொகை வழங்க GST ரூ.20000/- பிடித்தம் செய்யப்பட வேண்டும் மேற்படி அதற்காகும் கூடுதல் செலவினம் ரூ20000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.518/2018/எச்.1</td></tr>
<tr><td>பொருள் எண்–3</td><td>சீர்காழி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் குப்பை அகற்றும் டிராக்டர் TN82Z8640 மற்றும் டிரெய்லர் TN82Z8636 வாகனத்திற்கு தகுதிசான்று பெறும் பொருட்டு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில 19.06.2018 அன்று கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><td>வ.எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்தப்புள்ளி தொகை</td><td>டேவனித் தொகை</td></tr>
<tr><td>1</td><td>எம்.மகேஷ்குமார்<br>MMKஆட்டோகேர்<br>மெயின்ரோடு<br>சட்டநாதபுரம் சீர்காழி</td><td>ரூ.24950</td><td>ரூ.250<br>செ.சீ.எண்.0000734<br>தேதி.18.06.2018</td></tr>
<tr><td>2</td><td>ஆர்.சபரிராஜன்<br>வீரமகா காளியம்மன்</td><td>ரூ.27300</td><td>ரூ.250<br>செ.சீ.எண்.0000736</td></tr>
</table></td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>ஒர்க்ஸ் தென்பாதி</td><td></td><td>தேதி.18.06.2018</td></tr>
</table>
<br>
மேற்கண்வாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண்.1-ல் குறிப்பிடப்பட்டுள்ள எம்.மகேஷ்குமார் மெயின்ரோடு சட்டநாதபுரம் என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கவும் பணிகள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண்.1649/2018/எச்.1
</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்–4</td>
<td>
சீர்காழி நகராட்சி உட்பட்ட வார்டு எண்2,4,5,8,9,10,11,14,15,17 ஆகிய 10 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் மயம் மூலம் 31 துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள ரூ.3419000/- க்கு நகர் மன்ற தீர்மான எண்.181 நாள்.19.03.2018 – ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது ஓய்வு பெற்ற துப்புரவு பணியிடம் காலியாக உள்ளது. எனவே காலி பணியிடத்திற்கு தனியார் மயம் துப்புரவு பணியாளர்கள் 5 நபர்களை கொண்டு ஜீலை 2018 முதல் 31.03.2019 வரை உள்ள நாட்களுக்கு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் நாகப்பட்டினம் அவர்களால் தெரிவிக்கப்பட்ட தினக்கூலி தொகை அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயல்முறைகள் 8331/பி3/2018 நாள்.07.04.2018 – ல் .இக்காலிப்பணியிடங்களை தற்போது உள்ள ஒப்பந்ததாரர் மூலமாக பணியாளர்களை நியமிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஒப்பந்ததாரரால்1 நபருக்கு 1 நாளைக்கு ரூ.334 / வீதம் மேற்கண்ட 5 பணியாளர்களுக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச செலவீனம் ரூ.400000 /- க்கு நகராட்சி பொது நிதியில் செலவுகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.518/2018/எச்.1
</td>
</tr>
</table>

(ஒம்) . திரு.மு.அஜிதாபர்வின்.B.sc.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–17.07.2018

/உண்மை நகல்/

ஆணையர்
சீர்காழி நகராட்சி.